[1982 மார்ச் 3

சுண்ணாம்பு கற்கள் எடுப்பதற்கான அனுமதி வழங்கும் திட்டம்.

*வினா எண் 337—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட் தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணாம்புக்கல் எடுக்கும் அனுமதி (தனியாருக்கு) நிறுத்தப்பட்டு உள்ளதா ?

(ஆ) கூட்டுறவு சங்கங்கட்கு அந்த அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) ஆம். விதிகளின்படி விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு சுரங்கக் குத்தகை வழங்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட உரிமம் கேட்டு, தனியாரிடமிருந்து புதிய விண்ணப்பம் வந்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தனியார்களுக்கு அனுமதி வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதாகும். ஆகவே உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் நிறுத்தி வைப்பதில்லை. தனியார்கள் பலரிடமிருந்து நூற்றுக்கணக்கான மனுக்கள் வந்து இருக்கின்றன. அவை பற்றியெல்லாம் பரிசீலிக்கப்பட்டு தகுதிக்கேற்ப முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெரிய தொழிற்சாலைகள் என்றால் 5 ஆண்டுகள் என்றும், சிறிய தொழிற்சாலைகள் என்றால் 3, 4 ஆண்டுகள் என்றும் சிலவற்றிற்கு 2, 3 ஆண்டுகள் என்றும் தகுதிற்கேற்ப அவைகள் பரிசீலிக்கப்பட்டு அதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இந்த உரிமம் வழங்குவதைப் பொறுத்த வரையிலே மாநில அரசுக்கு பூரண உரிமை இருக்கின்றதா ? அல்லது மத்திய அரசைக் கேட்டுத்தான் இந்த உரிமமும் வழங்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே இந்த உரிமம் வழங்குவதைப் பொறுத்த வரையில் அது மாநில அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டதுதான்.